


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 315 | 4 Pages | 10.6.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 315 | 4 பக்கங்கள் | 10.6.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

# நீடித்த வளர்ச்சி இலக்கில் ஐரோப்பாவைவிட தமிழ்நாடு முன்னேறியுள்ளது: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஜூன் 10

நீடித்தவளர்ச்சி இலக்கில்ஐரோப்பாவைவிட தமிழ்நாடு முன்னேறியுள்ளது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.தமிழ்நாட்டின்நீடித்தவளர்ச்சி இலக்கு, ஐரோப்பாவின் ஒட்டு மொத்த சராசரியைவிட முன்னேறியுள்ளது. கிராமப்புற வேலை, மின் வாகனங்கள், அறிவுப் பொருளாதாரம் ஆகியவற்றில் ஐரோப்பாவை விஞ்சியது தமிழ்நாடு. ஒரு டிரில்லியன் பொருளாதார இலக்கு என்பது எட்டக்கூடிய தூரத்தில் உள்ளது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.




# இந்திய கடற்படையின் அரக்கோணம் ஹெலிகாப்டர் பயிற்சி பள்ளியில் இருந்து 18 பைலட்டுகள் தேர்ச்சி

சென்னை, ஜூன் 10

அரக்கோணத்தில் உள்ள ஐ.என்.எஸ். ராஜாளி கடற்படை தளத்தில் இன்று நடைபெற்ற கண்கவர் பயிற்சி நிறைவு அணிவகுப்பில் 18 பேர் ஹெலிகாப்டர் பைலட்டுகளாக கடற்படையில் இணைந்தனர். அவர்களில் சப் லெப்டினன்ட் சித்தி ஹேமந்த் துபே என்னும் ஒரு பெண் அதிகாரியும் அடங்குவார். அவர் இந்திய கடற்படையில் ஹெலிகாப்டர் பைலட்டாக இணையும் இரண்டாவது அதிகாரி ஆவார்.

ஐ.என்.எஸ். ராஜாளியில் உள்ள இந்திய கடற்படை ஏர் ஸ்குவாட்ரன்561ன்கீழ் செயல்படும் ஹெலிகாப்டர் பயிற்சி பள்ளியில் அவர்கள் கடந்த 22 வாரங்களாக நடைபெற்ற பறத்தல் மற்றும் தரை நிலை பயிற்சிகளை முடித்து பைலட்டுகளாக கடற்படையில் இணைந்துள்ளார்கள். அதற்கான கோல்டன் விங்ஸ் விருதுகளை அவர்களுக்கு கடற்படையின் கிழக்கு பிராந்திய தளபதி வைஸ் அட்மிரல் ராஜேஷ் பெந்தார்கர் அணிவித்து கவுரவித்தார்.

இப்பைலட்டுகள் இந்திய கடற்படையின் பல்வேறு பிரிவுகளில் கண்காணிப்பு, ரோந்து, தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள், கடற்கொள்ளைக்கு எதிரான நடவடிக்கை போன்ற பல்வகை பணிகளில் ஈடுபட உள்ளார்கள். நிகழ்ச்சியில் பேசிய வைஸ் அட்மிரல் பெந்தார்கர் கூறியதாவது:



இந்திய கடற்படையில் இன்று 18 இளைஞர்கள் பைலட்டுகளாக இணைந்துள்ளார்கள். அவர்கள் எவ்வாறு பறப்பது என்பது பற்றி மட்டுமல்லாமல் எந்த இலக்குடன் செயல்படுவது என்பது பற்றியும் கற்று அறிந்துள்ளார்கள். கடலிலும் வானிலும் துல்லியமாக இயங்குதல் பைலட்டுகளுக்கு அவசியம்; அதற்கான திறனை அவர்கள் தொடர்ந்து பேணவேண்டும். அவர்கள் அணிந்துள்ள விங்ஸ் ஆப் கோல்ட் விருது ஒரு பதக்கம் மட்டுமல்ல, அது அவர்களது கட்டுப்பாடு, இலக்கு ஆகியவற்றின் சின்னம். இந்த விருது பல்வேறு பொறுப்புகளை சுமந்து வருகிறது. இந்த இளம் பைலட்டுகள் வரலாற்று சிறப்பு வாய்ந்த இந்திய கடற்படையின் பெருமையில் பங்கேற்கிறார்கள்.

இந்திய கடற்படையின் வான் பிரிவு துல்லியமான செயல்பாட்டுடனும் பெருமையுடனும் தனித்துவத்துடன் செயல்படுகிறது. கப்பல்களின் தளத்திலிருந்தும், கடற்படை தளங்களில் இருந்தும் விவேகமாக செயல்படும் திறனை அவர்கள் பெற்றுள்ளார்கள். கடற்படையின் முக்கிய நடவடிக்கைகள், பிற நாடுகளுடனான கூட்டு கடற்படை பயிற்சி, தேடுதல் மற்றும் மீட்பு பணிகள், மனிதாபிமான உதவிகள் போன்ற அனைத்து பணிகளிலும் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு உள்ளார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

அரக்கோணத்தில் உள்ள இந்திய கடற்படையின் 561வது ஏர் ஸ்குவாட்ரன் இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து கடற்படை பைலட்டுகளின் பயிற்சி கூடமாக திகழ்கிறது. கடற்படை மட்டுமின்றி இந்திய கடலோர காவல் படை மற்றும் பல்வேறு நட்பு நாடுகளின் அதிகாரிகளும் இங்கு ஹெலிகாப்டர்பைலட் பயிற்சி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# குமரி: ஓடும் பஸ்சில் மூதாட்டியிடம் தங்கநகை பறிப்பு

குமரி, ஜூன் 10

கன்னியாகுமரி மாவட்டம் வில்லுக்குறி அருகே உள்ள மாடத்தட்டுவிளைபண்டாரக்காடு பகுதியை சேர்ந்தவர் கிறிஸ்துதாஸ். இவரது மனைவி வர்க்கீஸ்அம்மாள்(வயது 75). இவர் நேற்று காலை மாடத்தட்டுவிளை கான்வென்ட் சந்திப்பு பஸ் நிறுத்தத்தில் இருந்து தோட்டியோடு செல்வதற்காக அரசு பஸ்சில் ஏறினார்.

பஸ் தோட்டியோடு சென்றதும் நிறுத்தத்தில் வர்க்கீஸ் அம்மாள் இறங்க முயன்றார். அப்போது அவரது கழுத்தில் அணிந்திருந்த $3\frac{1}{4}$ பவுன் நகை மாயமாகி இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனே வர்க்கீஸ் அம்மாள் இது பற்றி டிரைவர் மற்றும் கண்டக்டரிடம் கூறி விட்டு பஸ் முழுவதும் தேடி பார்த்தார். ஆனாலும், நகை கிடைக்கவில்லை. கூட்டநெரிசலை பயன்படுத்தி யாரோ மர்ம ஆசாமி நகையை அபேஸ் செய்தது தெரியவந்தது.

பின்னர், இதுகுறித்து வர்க்கீஸ் அம்மாள்

இரணியல் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் இரணியல் போலீசார் விசாரணை நடத்தி மர்ம ஆசாமியை தேடி வருகிறார்கள்.

# ஓடும் பஸ்சில் கண்டக்டர் நெஞ்சு வலியால் உயிரிழப்பு அதிர்ச்சி சம்பவம்



கடலூர் ஜூன் 10

திருச்சியில் இருந்து காஞ்சிபுரத்திற்கு நேற்று இரவு அரசு பஸ் புறப்பட்டது. அந்த பஸ் கண்டக்டராக மோகன் (வயது 56) பயணியாற்றி வந்தார்.

இந்நிலையில், கடலூர் மாவட்டம் தொழுதூர் அருகே பஸ் சென்றுகொண்டிருந்தபோது கண்டக்டர் மோகனுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது.

இதனால், அருகில் உள்ள மருத்துவமனைக்கு பஸ்சை கொண்டு சென்றனர். அங்கு கண்டக்டர் மோகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த டாக்டர்கள் நெஞ்சுவலியால் கண்டக்டர் மோகன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இதையடுத்து, அவரது உடல் பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


# கிளாம்பாக்கத்தில் அலைமோதிய கூட்டம்: போக்குவரத்துக்கழகம் விளக்கம்

சென்னை, ஜூன் 10

கிளாம்பாக்கத்தில் இருந்து வெளியூர்களுக்கு போதிய பஸ்கள் இயக்கப்படவில்லை என பயணிகள் குற்றம் சாட்டிய நிலையில் கடந்த 4ந் தேதி முதல் 6ந் தேதி வரை கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் பயணிகளின் தேவைக்கேற்ப கூடுதல் பஸ்கள் இயக்கப்பட்டதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி, கும்பகோணம், தூத்துக்குடி, கோவை, சேலம் ஈரோடு திருப்பூர் ஆகிய இடங்களுக்கு முன்பதிவு அடிப்படையில் சிறப்பு பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது கடந்த 3 நாட்களில் பயணிகளின் தேவைக்கேற்பவும், முன்பதிவு அடிப்படையிலும் போதுமான பஸ்கள் இயக்கப்பட்டுள்ளது.4ந் தேதி 7 ஆயிரத்து 31 பயணிகளும், 5ந் தேதி 8 ஆயிரத்து 496 பயணிகளும், 6ந் தேதி 9 ஆயிரத்து 364 பயணிகளும் முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டுள்ளனர்.இந்த 3 நாட்களில் மொத்தம் 24 ஆயிரத்து 831 முன்பதிவு செய்த பயணிகள் உள்பட 2 லட்சத்து 76 ஆயிரத்து 735 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து வெளியூர் செல்வதற்கு 94 ஆயிரத்து 926 முன்பதிவு இருக்கைகள் உள்ள நிலையில் 26 சதவீத இருக்கைகள் மட்டுமே கடந்த 3 நாட்களில் முன்பதிவு செய்து பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.முன்பதிவு வசதி உள்ள அரசு பஸ்களில் அதிகபட்சமாக 9 சதவீதம் மட்டுமே முன்பதிவு செய்யப்படுகிறது. பயணிகள் முன்பதிவு செய்து பயணம் செய்தால், பஸ் நிலையங்களில் தேவையற்ற விவாதங்கள், முண்டியடித்து ஏறுதல் மற்றும் தேவையற்ற சர்ச்சைகள் ஏற்படுவதை அறவே தவிர்க்கப்படும்.மேலும் நள்ளிரவு நேரங்களில் ஒரே நேரத்தில் மிக அதிகளவில் பயணிகள் பஸ் நிலையத்திற்கு பயணம் மேற்கொள்ள வருகை புரிவதால் பயணிகளுக்கு தவிர்க்க முடியாத சிரமம் ஏற்படுகிறது.எனவே, தொலைதூர பயணம் மேற்கொள்ளும் பயணிகள் கடைசிநேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு www/tnstc.in என்ற இணையதளம் மற்றும் செயலி மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பயணிகள் முன்பதிவு செய்யும் பட்சத்தில் தேவைக்கேற்ப கூடுதலாக பஸ்களை இயக்கிட வழிவகை செய்யப்படும்.எனவே, பயணிகள் தங்களது பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு முன்பதிவு செய்து எந்தவித சிரமமும் இன்றி பயணம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

விளக்கம்: இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடையதீமையையும்நன்மையையும் மறந்து விடுதலாகும்.

# மெக்சிகோவில் விமான விபத்தில் 3 பேர் பலி



மெக்சிகோ, ஜூன் 10

மெக்சிகோவில் சிறிய விமானம் ஒன்று தரையில் விழுந்து நொறுங்கியதில் 3 பேர் உயிரிழந்தனர். கவுதமாலா எல்லைக்கு அருகே உள்ள ஒரு பகுதியில் கால்நடைகளிடையே பரவும் ஒட்டுண்ணிகளை அழிக்க கூடிய குறிப்பிட்ட வகையை சேர்ந்த ஈக்களை விமானத்தில் இருந்து பறக்க செய்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் பலியானவர்களில் 2 பேர் கவுதமாலாவை சேர்ந்த விமானிகள் ஆவர்.

# பெண் நோயாளிகளுக்கு பாலியல் தொல்லை; டாக்டருக்கு 21 ஆண்டுகள் சிறை



ஓஸ்லோ ஜூன் 10

ஐரோப்பிய நாடான நார்வேயின் டிரோன்ட்ஹெய்முக் நகரைச் சேர்ந்தவர் ஆர்னே பை (வயது 70). டாக்டராக இருந்த அவர் தன்னிடம் சிகிச்சைக்குச் வரும் பெண்கள் பலரை பலாத்காரம் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. நாட்டையே உலுக்கிய இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் ஆர்னேவை கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து அவர் சிகிச்சை அளிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணை தற்போது நிறைவடைந்த நிலையில் அவர் 80க்கும் மேற்பட்ட பெண்களுக்கு பாலியல் தொல்லை அளித்தது உறுதியானது. எனவே ஆர்னேவுக்கு 21 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது.

# எலான் மஸ்க் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்: டிரம்ப் பகிரங்க எச்சரிக்கை



வாஷிங்டன், ஜூன் 10

அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்டு டிரம்புக்கு முழு ஆதரவாக இருந்தவர் தொழிலதிபர் எலான் மஸ்க். டிரம்ப் மீண்டும் அதிபர் ஆனதும், அமெரிக்க அரசின் செலவினங்களை குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட துறையை எலான் மஸ்க் கவனித்தார். இந்நிலையில், அமெரிக்க அரசின்பட்ஜெட் தயாரானது. இதில் எலான் மஸ்க் தலைமையிலான குழு பரிந்துரைந்த விஷயங்கள் இடம் பெறவில்லை.

ஏராளமான வரிச்சலுகைகள், அமெரிக்க ராணுவ செலவினங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு , மின்சார வாகனங்களுக்கான 7,500 டாலர் மானியம் ரத்து போன்ற அம்சங்களால், எலான் மஸ்க் அதிருப்தி அடைந்தார். இதனால் அவர் டிரம்ப் நிர்வாகத்தில் இருந்து விலகும் அறிவிப்பை வெளியிட்டார். மேலும் டிரம்ப் குறித்தும் கடுமையாக விமர்சித்தார். இதற்கு டிரம்பும் பதிலடி கொடுத்தார். இந்த மோதலுக்கு இடையே, எலான் மஸ்க் புதிய கட்சி தொடங்க இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், மஸ்க் கடுமையாக எதிர்த்த 'பிக் அண்ட் பியூட்டிஃபுல் பில்' லை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என டிரம்ப் வலியுறுத்தி இருந்தார். புத்தியை இழந்துவிட்ட மஸ்க் உடன் இனி எப்போதும் பேசப் போவதில்லை என டிரம்ப் திட்டவட்டமாகக் கூறினார்.இதற்கிடையே, 'தி அமெரிக்கா பார்ட்டி' என்ற பெயரில் கட்சி துவங்க இருப்பதாக எலான் மஸ்க் அறிவித்தார். இந்நிலையில் செய்தி சேனலுக்கு பேட்டி அளித்த டிரம்ப், எலான் மஸ்க்கை கடுமையாக விமர்சித்து இருக்கிறார்.

டிரம்ப் கூறியிருப்பதாவது: எலான் மஸ்க் மிகவும் அவமரியாதைக்குரியவர். அவர் வெள்ளை மாளிகையை அவமரியாதை செய்தார். அவரால் (எலான் மஸ்க்) நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். நான் அவருக்கு நிறைய உதவி செய்திருக்கிறேன். அதிபர் பதவியை அவமரியாதை செய்ய முடியாது.

வரி குறைப்பு மற்றும் செலவு மசோதாவுக்கு ஆதரவாக ஒட்டளிக்கும் குடியரசுக் கட்சியினருக்கு எதிராக போட்டியிட ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு எலான் மஸ்க் நிதியுதவி செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்.மஸ்க்உடனானஉறவுகளைசீர்படுத்தும்எண்ணம்இல்லை.அவருடனான உறவு முறிந்தது முறிந்ததுதான். நான் மற்ற வேலைகளைச் செய்வதில் மிகவும் பிஸியாக இருக்கிறேன். அவரிடம் பேசும் எண்ணம் எனக்கு இல்லை" என்றார்.

# கொலம்பியா அதிபர் வேட்பாளர் மீது துப்பாக்கி சூடு அதிர்ச்சி சம்பவம்



பொகொடா, ஜூன் 10

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு கொலம்பியா.அந்நாட்டில் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. எதிர்க்கட்சியான பழமைவாத ஜனநாயக மையம் கட்சியை சேர்ந்த எம்.பி. மிகுல் உர்பெல் டர்பே (வயது 39) அதிபர் வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

இந்நிலையில்,தலைநகர்பொகொடாவில்நேற்றுநடந்தபிரசாரநிகழ்ச்சியில் மிகுல் உர்பெல் பங்கேற்றார். அப்போது, திடீரென அவர் மீது துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தப்பட்டது. அவரது முதுகு பகுதியில் துப்பாக்கி குண்டு பாய்ந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த போலீசார், முகுல் உர்பெலை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

## திருச்சி: வீட்டிலிருந்த பிரிட்ஜ் திடீரென தீப்பிடித்ததால் பரபரப்பு

திருச்சி, ஜூன் 10

திருச்சி மாவட்டம் முசிறி அருகே வீட்டிலிருந்த பிரிட்ஜ் தீப்பிடித்ததால் ஒரு லட்சம் மதிப்புள்ள பொருட்கள் தீயில் எரிந்து சேதமடைந்தன. ஏலூர்பட்டி கிராமத்தை சேர்ந்த திருவரங்கசெல்வன் என்பவரது வீட்டில் இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது.



உடனே திருவரங்கசெல்வன் வீட்டில் இருந்த தனது தாய் மற்றும் பாட்டியை வெளியே அனுப்பி வைத்துள்ளார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு துறையினர், தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால் அதற்குள் சுமார் ரூ.1 லட்சம் மதிப்பிலான பொருட்கள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தன.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கடந்த 2 நாட்களில் சென்னையில் இருந்து அரசு பஸ்களில் 1.66 லட்சம் பேர் பயணம்

சென்னை ஜூன் 10

சுபமுகூர்த்த தினம், பக்ரீத் பண்டிகை, வாரவிடுமுறை ஆகிய காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் சென்னையில் இருந்து மக்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு சென்றனர்.

இதன் காரணமாக அரசு, தனியார் பஸ்கள், ரெயில்களில் கூட்ட நெரிசல் காணப்பட்டது.



இந்நிலையில், கடந்த 2 நாட்களில் சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு அரசு பஸ்களில் 1 லட்சத்து 66 ஆயிரத்து 540 பேர் பயணித்துள்ளதாக அரசு விரைவு போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது. கடந்த 2 நாட்களில் சென்னையில் இருந்து 3 ஆயிரத்து 28 அரசு பஸ்கள் இயக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சேலம்: சரக்கு வேன் கவிழ்ந்து 3 பேர் படுகாயம்

சேலம், ஜூன் 10

சேலம் மாவட்டம் காட்டூரை சேர்ந்தவர் சந்திரசேகர் (வயது 40). இவர் கோடை விழாவையொட்டி ஏற்காடு ஒண்டிக்கடை பகுதியில் கரும்பு ஜூஸ் கடை நடத்தி வந்தார். கோடை விழா முடிந்த பின்னர் ஏற்காட்டுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்தது. இதனிடையே நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) சேர்வராயன் கோவில் திருவிழா நடைபெற உள்ளது.

இதனால் ஒண்டிக்கடை பகுதியில் உள்ள ஜூஸ் கடையை சேர்வராயன் கோவிலுக்கு மாற்றுவதற்காக சந்திரசேகர் நேற்று காலை சேலத்தில் இருந்து ஏற்காட்டிற்கு சரக்கு வேனில் வந்தார். இந்த வேனை அன்னதானப்பட்டியை சேர்ந்த அல்லிமுத்து மகன் ஹரிஹரன் (வயது 28) என்பவர் ஓட்டி வந்தார். இவர்களுடன் ராசிபுரம் பகுதியை சேர்ந்த முருகேசன் (40) நடராஜன் (40) ஆகியோரும் வந்தனர்.

ஏற்காடு மலைப்பாதையில் 17வது கொண்டை ஊசிவளைவை கடந்து சென்றபோது தனியார் பஸ்சை, வேன் டிரைவர் முந்தி செல்ல முயன்றார்.



அப்போது கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலையில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் சந்திரசேகர், முருகேசன், நடராஜன் ஆகிய 3 பேரும் படுகாயம் அடைந்தனர். டிரைவர் லேசான காயம் அடைந்தார்.


அந்த வழியாக வந்தவர்கள் 3 பேரையும் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஏற்காடு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் அவர்கள் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கபபட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் ஏற்காடு போலீசார் விரைந்து வந்து கவிழ்ந்த சரக்கு வேனை அப்புறப்படுத்தினர். தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஒகேனக்கல் காவிரி ஆற்றின் நீர்வரத்து குறைவு

ஒகேனக்கல், ஜூன் 10

தமிழக கர்நாடக காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.



தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான அஞ்செட்டி, கேரட்டி, நாட்றாம்பாளையம், ராசிமணல் உள்ளிட்ட பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நேற்று ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 7 ஆயிரம் கன அடியாக வந்தது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை குறைந்தது. இந்த நிலையில் தற்போதைய நிலவரப்படி நீர்வரத்து 7 ஆயிரம் கன அடியில் இருந்து 6,500 கன அடியாக குறைந்து உள்ளது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ், ஐவர்பாணி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு உடை அணிந்து பாறைகளுக்கு இடையே காவிரி ஆற்றில் உற்சாகமாக பரிசல் சவாரி மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர்.

## பிளஸ்1 மாணவியிடம் சில்மிஷம்; பள்ளி ஆசிரியர் கைது

சேலம், ஜூன் 10

சேலம் மாவட்டம் காகாபாளையம் பகுதியை சேர்ந்தவர் ஜெகதீசன் (வயது 56). இவர், சிவதாபுரம் பகுதியில் உள்ள ஒரு தனியார் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். இவர் பள்ளியில் பிளஸ்1 படிக்கும் 16 வயது மாணவி ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து வந்ததாக புகார் எழுந்தது.

இதுகுறித்து மாணவியின் பெற்றோர் நேற்று சேலம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். அதன் பேரில் போலீசார் விசாரணை நடத்தியதில் ஆசிரியர் ஜெகதீசன், சம்பந்தப்பட்ட மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து ஆசிரியர் மீது போக்சோ பிரிவின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## செங்கோட்டை-ஈரோடு எக்ஸ்பிரஸ் ரெயில்கள் பகுதி நேரமாக ரத்து

சென்னை, ஜூன் 10

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சேலம் கோட்டத்தில் பல்வேறு பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஈரோட்டில் இருந்து புறப்பட்டு செங்கோட்டை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்16845) நாளை (திங்கட்கிழமை), 12, 14, 16 ஆகிய தேதிகளில் பகுதி நேரமாக ஈரோடு-கரூர் இடையே ரத்து செய்யப்படுகிறது. மேலும், இந்த ரெயில், கரூரில் இருந்து மதியம் 3.05 மணிக்கு புறப்பட்டு செங்கோட்டை செல்லும்.



அதே தேதிகளில், செங்கோட்டையில் இருந்து புறப்பட்டு ஈரோட்டிற்கு வரும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16846), கரூர்-ஈரோடு இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கல்பனா சாவ்லா விருது: பெண்கள் ஜூன் 16க்குள் விண்ணப்பிக்கலாம்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்

தூத்துக்குடி ஜூன் 10

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2025ம் ஆண்டு தமிழ்நாடு அரசால் கல்பனா சாவ்லாவின் நினைவாக அவரது துணிச்சலான செயல்களை பாராட்டும் வகையில் பெண்களில் துணிச்சலையும் துணிச்சலான முயற்சியையும் வெளிப்படுத்தும் மற்றும் துணிச்சலான தொழில்முனைவோருக்கு கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட உள்ளது.

இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் முதல்அமைச்சரால் தைரியம் மற்றும் துணிச்சலான செயல்களில் ஈடுபடுதல் மற்றும் துணிச்சலான தொழில்முனைவோருமான தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்கு, தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் மற்றும் ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கும் தனிநபர் (மகளிர் மட்டும்) தமிழகத்தில் பிறந்தவராகவும் 18 வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும்.




1. ஒரு பக்கம் அந்த நபரைப் பற்றியும், துணிச்சல் மற்றும் துணிச்சலான முயற்சிகளை பற்றியும் தமிழில் மருதம் மற்றும் ஆங்கிலத்தில் Verdana எழுத்துருவில் எழுதப்பட்டிருக்க இருக்க வேண்டும்.

2. அந்த நபரின் சுய விவரம் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம்2

3. படிவம் முழுமையாக நிரப்பப்பட வேண்டும். 4. விண்ணப்பதாரின் சுயசரிதை தரவு. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, https://awards.tn.gov.in என்ற இணையதளம் வழியாக தங்களின் பெயர், பிறந்த தேதி, முகவரி, கல்வித்தகுதி, தாங்கள் செய்த துணிச்சலான செயல் குறித்த உரிய விவரங்கள், நிழற்படங்கள், விருது பெற்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் போன்ற முழு விபரங்களுடன் 16.6.2025க்குள் விண்ணப்பித்து அதன் கருத்துருவினை மாவட்ட சமூக நலஅலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கோரம்பள்ளம், தூத்துக்குடி628101 என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நெல்லை, தென்காசியில் மின்தடை புகார் எண்கள் அறிவிப்பு

திருநெல்வேலி ஜூன் 10

அனைவரது இல்லங்களிலும், அலுவலகங்களிலும், மின் பாதுகாப்பு சாதனம் (RCD) அமைத்து நமது குடும்ப உறவுகளின் உயிர்களை பாதுகாப்போம். மின் சாதனங்களை தேவையான இடத்தில் தேவையான பொழுது மட்டும் பயன்படுத்தி மின்சாரத்தை சேமிப்போம். சூறை




காற்று, இடி, மின்னல், மழை, நேரங்களில் மின்பாதைகள், மின்கம்பங்கள், மின்மாற்றிகள், மின்சாதனங்கள், மரங்கள் அருகிலே அல்லது கீழே நிற்க வேண்டாம். மின்சாரம் சம்பந்தமான அனைத்து சேவைகளுக்கும் தமிழ்நாடு மின்பகிர்மானகழகத்தின் செயலி (TNPDCL OFFICIAL APP) திருநெல்வேலி மின் தடை நீக்கும் மையம் தொலைபேசி எண்கள் 9445859032, 9445859033, 9445859034, மற்றும் மின்னகம் மின் நுகர்வோர் சேவை மையம் தொலைபேசி எண் 94987 94987 ஆகியவற்றை தொடர்பு கொண்டு திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களைச்சேர்ந்த பொதுமக்கள் தங்களுடைய மின்தடை புகார்கள் தொடர்பாக தகவல் தெரிவிக்கலாம் என்று திருநெல்வேலி மின் பகிர்மான கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடியில் பள்ளி அருகே ரவுண்டானா பணியை விரைவுபடுத்த வேண்டும்: சிபிஎம் வலியுறுத்தல்

தூத்துக்குடியில் பள்ளி அருகே ரவுண்டானா அமைக்கும் பணிக்காக சரள் விரிக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளதால் விபத்து ஏற்படும் நிலை உள்ளது.

தூத்துக்குடி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாநகர செயலாளர் முத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"தூத்துக்குடி பிரதான சாலை அதாவது ECR இணைப்பு சாலையில் செயின்ட் தாமஸ் பள்ளி அருகே ரவுண்டானா அமைக்கப்பட்டு வருகிறது. அந்த சாலையில் போக்குவரத்து நெருக்கடி உள்ள பகுதியாகும். மேலும் பள்ளிகள் நிறைந்த பகுதி, பள்ளி மாணவர்கள் அதிகம் பேர் சைக்கிள்களில் சென்று வருகின்றனர்.

மேலும்தூத்துக்குடி நகரையும் ECR சாலையையும் இணைப்பதால் பேருந்துகள் மற்றும் கார்கள் அதிகமான செல்கின்றன.

இந்த நிலையில் ரவுண்டானா அமைக்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. சரள் விரிக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் பணிகள் முடிக்கப்படாமல் வாகனங்கள் செல்லும் போது புழுதி கிளம்பி சுவாசப் பிரச்சினை ஏற்படுவதோடு விபத்தும் ஏற்படும் நிலை உள்ளது. மேலும் ரவுண்டானாவின் விட்டத்தை சிறிது குறைத்தால் நல்லது. எனவே நெடுஞ்சாலைத் துறை ரவுண்டானா அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென தூத்துக்குடி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரக்குழு சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திமுக அரசின் முகமூடி கிழிந்தது: வாழத்தகுதியற்ற மாநிலமாக மாறுகிறதா தமிழ்நாடு? அன்புமணி ராமதாஸ்



சென்னை ஜூன் 10

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரை அடுத்த சீத்தம்பூண்டி கிராமத்தில் தோட்டத்து வீட்டில் தனியாக வாழ்ந்து வந்த சாமியாத்தாள் என்ற மூதாட்டி நேற்றிரவு கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். தோட்டத்து வீடுகளில் தனியாக வாழும் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வரும் நிலையில், அவற்றைத் தடுக்கத் தெரியாமல் திமுக அரசு தடுமாறி வருவது கண்டிக்கத்தக்கது.

அண்மைக்காலங்களில் தோட்டத்து வீடுகளில் தனியாக வாழ்ந்து வரும் பெரியவர்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்படுகின்றனர். 6 மாதங்களுக்கு முன் நவம்பர் 28ம் தேதி திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே உள்ள சேமலைக்கவுண்டன்பாளையம் கிராமத்தில் தோட்டத்து வீட்டில் வசித்து வந்த 78 வயது தெய்வசிகாமணி, அவரது மனைவி அலமாத்தாள், செந்தில்குமார் ஆகிய மூவரும் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டு, நகை மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. அதன்பின், கடந்த மே மாதத் தொடக்கத்தில் ஈரோடு மாவட்டத்தின் விளாங்காட்டு வலசு கிராமத்தில் தோட்டத்து வீட்டில் தனியாக வாழ்ந்து வந்த முதிய இணையரான ராமசாமி, பாக்கியலட்சுமி ஆகியோரை கொள்ளையர்கள் அடித்துக் கொலை செய்து விட்டு, 15 பவுன் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். அடுத்தடுத்து நடந்த இந்தக் கொலைகளால் தமிழ்நாட்டுமக்களிடம்பெரும் அச்சம் ஏற்பட்டது.

நவம்பர் மாதம் நடந்த மூவர் படுகொலைக்கு காரணமானவர்கள் 6 மாதங்களுக்கும் மேலாக கைது செய்யப்படாத நிலையில், மேலும் இருவர் படுகொலை செய்யப்பட்டதால், தமிழககாவல் துறையின் செயல்திறன் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டன. அதனால், விளாங்காட்டு வலசு கொலை வழக்கில் தொடர்புடையதாக ஆச்சியப்பன், மாதேஸ்வரன், ரமேஷ், ஞானசேகரன் ஆகிய நால்வரை கைது செய்த காவல்துறையினர், இவர்கள் தான் சேமலைக்கவுண்டன்பாளையத்தில் மூவரையும் கொலை செய்ததாகக் கூறி வழக்குகளை முடித்தனர். அப்போதே அவர்கள் தான் உண்மையான கொலையாளிகளா? என்பது குறித்து ஐயங்கள் எழுப்பப்பட்டன.

இத்தகைய சூழலில் தான் பரமத்தி அருகே மேலும் ஒரு படுகொலை நிகழ்ந்திருக்கிறது. சில வாரங்களுக்கு முன் கைது செய்யப்பட்டவர்கள் தான் உண்மையான குற்றவாளிகள் என்றால், இந்தக் கொலையை செய்தவர்கள் யார்? ஒருவேளை இந்தக் கொலையை செய்தவர்கள் புதிய கொலையாளிகள் என்றால், அதைத் தடுக்க அரசும், காவல்துறையும் தவறியது ஏன்? தோட்டத்துக் கொலைகளைத் தடுக்க பண்ணை வீடுகளை ஒட்டிய பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், காமிராக்கள்பொருத்தப்பட்டிருப்பதாகவும் காவல்துறை கூறியிருந்த நிலையில் அவற்றையும் தாண்டி இந்தபடுகொலை எவ்வாறு நடந்தது? என்பதற்கு தமிழக அரசும், காவல்துறையும் விளக்கமளிக்கவேண்டும். மொத்ததில் குற்றவாளிகளைப் பிடித்துவிட்டதாக நாடகமாடிய திமுக அரசின் முகமூடி கிழிந்து விட்டது.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதற்கு பிறகு இதுவரை 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. சராசரியாக ஒரு நாளைக்கு 5 பேர் படுகொலை செய்யப்படுகின்றனர். சாலையில் சென்றாலும், வீடுகளில் இருந்தாலும் மக்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் தமிழ்நாடு வாழத்தகுதியற்ற மாநிலமாக மாறி வருகிறது. இதற்கெல்லாம் காரணமான செயல்திறனற்ற திமுக அரசை அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் வீட்டுக்கு அனுப்பப்போவது உறுதி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வானதி சீனிவாசனின் கண்மூடித்தனமான மோடிப்பற்று, தமிழர் நலனை காவு கொள்கிறதா? அமைச்சர் மனோ தங்கராஜ்

சென்னை, ஜூன் 10

அமைச்சர் மனோ தங்கராஜ் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசனின் கண்மூடித்தனமான மோடிப்பற்று, தமிழர் நலனை காவு கொள்கிறதா? பிரதமர் மோடி மீது முன்வைக்கப்பட்ட நியாயமான விமர்சனத்தின் மீது தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கோபம்:

நமது சகோதரர்களான இஸ்லாமியர்களை பிரதமர் மோடி 2024 தேர்தல் நேரத்தில், வரிந்துகட்டிக் கொண்டு 110 மேடைகளில் வார்த்தை ஆயுதங்களால் கடுமையாக தாக்கினாரே,

அப்போது இதே கோபம் உங்களுக்கு ஏன் வரவில்லை? இஸ்லாமியர்களுக்கு எதிராக பா.ஜ.க. அரசு முன்னெடுத்த வக்பு, CAA விவகாரங்களில், மோடி மீது கோபம் வராதது ஏன்?

தமிழர்கள் கர்நாடகாவுக்கு வந்து வெடிகுண்டு வைக்கின்றனர் என தமிழர்களைதீவிரவாதிகளாக சித்தரித்து மத்திய மந்திரி ஷோபா பேசியபோது, கோபம் வராதது ஏன்? தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஒடிசாவை ஆட்சி செய்வதா? தமிழரான பாண்டியனை ஒருபோதும் நாங்கள் ஏற்கவும் முடியாது; பொறுத்துக் கொள்ளவும் முடியாது என ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் இழிவுபடுத்திய மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா மீது கோபம் வராதது ஏன்?

ஒடிசாவின் பூரி ஜெகநாதர் கோவில் புதையல் சாவியை தமிழ்நாட்டுக்கு எடுத்துச் சென்று விட்டனர் என்று தமிழர்களை திருடர்களாக பிரதமர் நரேந்திர மோடி சித்தரித்தாரே, அப்போது கோபம் வராதது ஏன்? தமிழ் மொழியை விட மூத்த மொழி சமஸ்கிருதம்தான் என நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. எம்பி நிஷிகாந்த் துபே பொய்பரப்பும் போது கோபம் வராதது ஏன்?

திருவள்ளுவருக்கு காவி உடை அணிந்து தமிழர்களை, சாதியுற்பத்திமதத்திற்குள் அடைக்க பல பா.ஜ.க. தலைவர்கள் முயற்சி செய்யும்போது, கோபம் வராதது ஏன்? நமது தமிழுக்கு ஓரவஞ்சனை காட்டி, சமஸ்கிருதத்திற்கு கோடிகோடியாக வாரி இறைத்தாரே, அப்போது ஏன் கோபம் வரவில்லை? நமது சகோதர இந்துக்களும், இஸ்லாமியரும் பஹல்காமில் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர், அவர்களை பாதுகாக்கத் தவறிய மோடி அரசின் மீது கோபம் வராதது ஏன்? அமெரிக்காவிடம் சரணடைந்தாரே, அப்போது ஏன் கோபம் வரவில்லை?

அ.தி.மு.க. ஊழல் கட்சி என்றனர், தற்போது கூட்டணி வைத்திருக்கின்றனரே, இதன் மீது ஏன் கோபம் வரவில்லை? தான் மனித பிறவி அல்ல, கடவுள் அவதாரம் என கடைந்தெடுத்த பொய்யை கட்டவிழ்த்து விட்டாரே, அப்போது ஏன்கோபம்வரவில்லை? இவற்றுக்கெல்லாம் கோபம் வராத பா.ஜ.க.வினருக்கு, உண்மையை சொல்லும் போது மட்டும் கோபம் வருவதில்ஏதோகோளாறு இருக்குமோ? என்றஐயம் உருவாகிறது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பராமரிப்பு பணி: சென்டிரல்-ஆவடி உள்பட 17 மின்சார ரெயில்கள் ரத்து

சென்னை, ஜூன் 10

சென்னை சென்டிரல் கூடூர் வழித்தடத்தில் உள்ள கவரைப்பேட்டை கும்மிடிப்பூண்டி ரெயில் நிலையம் இடையே இன்று (திங்கட்கிழமை) மற்றும் 12 ஆகிய தேதிகளில் காலை 11.20 மணி முதல் மாலை 3.20 மணி வரை (4 மணி நேரம்) பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் காரணமாக, அந்த வழித்தடத்தில் இயக்கப்படும் சில மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முழுவதுமாக ரத்து:

★ சென்டிரலில் இருந்து காலை 10.30, 11.35 ஆகிய நேரங்களில் புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது.

★ சென்டிரலில் இருந்து காலை 10.15, மதியம் 12.10, 1.05 மணிக்கு சூலூர்பேட்டை செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது.



★ கடற்கரையில் இருந்து காலை 9.40 மதியம் 12.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது.

★ சென்டிரலில் இருந்து இரவு 11.40 மணிக்கு ஆவடி செல்லும் மின்சார ரெயில் ரத்து செய்யப்படுகிறது.

★ கும்மிடிப்பூண்டியில் இருந்து மதியம் 1, 2.30 மாலை 3.15 ஆகிய நேரங்களில் சென்டிரல் செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது.

★ சூலூர்பேட்டையில் இருந்து மதியம் 1.15, மாலை 3.10, இரவு 9 மணிக்கு சென்டிரல் செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது.

★ சூலூர்பேட்டையில் இருந்து மாலை 3.50 மணிக்கு நெல்லூர் செல்லும் பயணிகள் ரெயிலும், மறுமார்க்கமாக நெல்லூரில் இருந்து மாலை 6.45 மணிக்கு சூலூர்பேட்டை வரும் பயணிகள் ரெயிலும் ரத்து செய்யப்படுகிறது.

பகுதி நேர ரத்து:

★ செங்கல்பட்டில் இருந்து இன்று மற்றும் 12 ஆகிய தேதிகளில் காலை 9.55 மணிக்கு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில் கடற்கரை கும்மிடிப்பூண்டி இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்பட்டு, கடற்கரையில் நிறுத்தப்படும்.

★ கும்மிடிப்பூண்டியிலிருந்து மாலை 3 மணிக்கு தாம்பரம் வரும் மின்சார ரெயில் கும்மிடிப்பூண்டி கடற்கரை இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, கடற்கரையில் இருந்து புறப்படும்.

சிறப்பு ரெயில்:

இதன் காரணமாக இந்த 2 தேதிகளிலும் காலை 10.30 மணிக்கு சென்டிரல் பொன்னேரிக்கும், காலை 11.35 மணிக்கு சென்டிரல் மீஞ்சூருக்கும், மதியம் 12.40 மணிக்கு கடற்கரை பொன்னேரிக்கும், மதியம் 1.18 மணிக்கு பொன்னேரி சென்டிரலுக்கும், மதியம் 2.56 மணிக்கு மீஞ்சூர்சென்டிரலுக்கும், மாலை 3.33 மணிக்கு பொன்னேரிசென்டிரலுக்கும் சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெயிண்டரிடம் கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த இளைஞர்கள் கைது

கன்னியாகுமரி ஜூன் 10

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் மேல தெருவைசேர்ந்தபெயிண்டர் அய்யப்பன் (வயது 33). இவரது நண்பர் டேனியல். சம்பவத்தன்று இருவரும் பைக்கில் சுசீந்திரம் அருகே கற்காடு ரெயில்வே கிராசிங் அருகே சென்ற கொண்டிருந்தனர்.





அப்போது சுசீந்திரம் கற்காடு பகுதியை சேர்ந்த பிரசாந்த் (26), கோட்டார் சபையார்குளத்தை சேர்ந்த அர்ஜுன் (23) ஆகிய இருவரும் சேர்ந்து அய்யப்பனைவழிமறித்தனர். பின்னர் தகாத வார்த்தைகள் பேசி தாக்கியும், கத்தியை காட்டி மிரட்டியுள்ளனர்.

மேலும் அவரது பாக்கெட்டில் இருந்த ரூ.1000 த்தை பறித்து விட்டு தப்பி சென்றனர். இதுகுறித்து அய்யப்பன் சுசீந்திரம் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி பிரசாந்த், அர்ஜுன் ஆகிய 2 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் இருந்து துபாய் புறப்பட்ட விமானத்தில் எந்திரக்கோளாறு: 326 பேர் உயிர் தப்பினர்...

சென்னை ஜூன் 10

சென்னை விமான நிலையத்தில் இருந்து துபாய் செல்ல எமிரேட் ஏர்லைன்ஸ் விமானம் நேற்று காலை 9.50 மணிக்கு 312 பயணிகள், 14 விமான ஊழியர்கள் என 326 பேருடன் புறப்பட்டது. விமானம் நடைமேடையில் இருந்து ஓடுபாதை நோக்கி சென்றது. டாக்சி பாதைக்கு வந்த போது விமானத்தில் திடீரென ஏந்திரக்கோளாறு ஏற்பட்டுள்ளதை விமானி கண்டுபிடித்தார். உடனடியாக விமானத்தை அவசரமாக நிறுத்தி விட்டு, விமான நிலைய கட்டுப்பாட்டுஅறைக்கு தகவல் கொடுத்தார்.




பின்னர் என்ஜினீயர்கள் குழு, விமானத்தில் ஏற்பட்ட எந்திர கோளாறை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டனர். எந்திரக்கோளாறை உடனடியாக சரிசெய்ய முடியாததால் 312 பயணிகளும் விமானத்தில் இருந்து இறக்கிவிடப்பட்டு ஓய்வறையில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர், விமான ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால், வேறு விமானங்கள் மூலம் பயணிகள் துபாய் அனுப்பி வைக்கப்பட்டனர். விமானத்தில் ஏற்பட்ட எந்திரக்கோளாறை, விமானி சரியான நேரத்தில் கண்டுபிடித்ததால் 326 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

# தைவான் தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழக வீராங்கனைக்கு டி.டி.வி. தினகரன் பாராட்டு

சென்னை ஜூன் 10

தைவான் தடகள ஓபன் 2025ம் ஆண்டுக்கான போட்டிகள் சீன தைபேவில் நடைபெற்று வருகிறது. இதில் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் தமிழக வீராங்கனை வித்யா ராம்ராஜ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இந்த நிலையில் தங்கப் பதக்கம் வென்ற வித்யாவுக்கு அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:






தைவான் நாட்டில் நடைபெற்றுவரும் தடகளப் போட்டியில் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற தமிழக வீராங்கனை வித்யா ராம்ராஜுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த வாரம் தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய தடகளப் போட்டியில் வெண்கலம் வென்ற நிலையில், தற்போது தைவான் தடகளப் போட்டியில் தங்கம் வென்று ஒட்டுமொத்த தேசத்திற்கும் பெருமை தேடி தந்திருக்கும் வித்யா ராம்ராஜின் பதக்க வேட்டைமென்மேலும் தொடர வாழ்த்தி மகிழ்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பூந்தமல்லி: பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த 2 சிறுவர்கள் மீது மின்சாரம் பாய்ந்ததால் பரபரப்பு

சென்னை ஜூன் 10

சென்னை பூந்தமல்லியில் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் மீது மின்சாரம் பாய்ந்து படுகாயமடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பூந்தமல்லி நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு சி.ஆர்.எம். நகர் பகுதியில் நகராட்சி பூங்கா ஒன்று உள்ளது. இந்த பூங்காவில் மாலை நேரத்தில் சிறுவர்கள் விளையாடுவது வழக்கம். இந்த நிலையில் இன்று மாலை திடீரென பெய்த மழையால் பூங்காவில்இருந்த மின்கம்பத்தில் மின்கசிவு ஏற்பட்டுள்ளது.





இந்த நிலையில் மழை நின்றதும், சிறுவர்கள் பூங்காவில் விளையாடியுள்ளனர். அப்போது மின்கம்பத்துக்கு அருகே விழுந்த பந்தை எடுக்க சென்ற சிறுவன் மீது மின்சாரம் பாய்ந்துள்ளது. இதைப் பார்த்த மற்றொரு சிறுவன் காப்பாற்ற முயன்றபோது அவன் மீதும் மின்சாரம் பாய்ந்தது.

இதுகுறித்து அறிந்த பூங்கா ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உடனடியாக மின்சாரத்தை நிறுத்தி இரண்டு சிறுவர்களையும் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இருவரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# திருவெறும்பூர் கோவில் வைகாசி விசாக திருவிழா தேரோட்டம் : அமைச்சர் அன்பில் மகேஷ் தரிசனம்

திருச்சி ஜூன் 10

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் கோவிலில் வைகாசி விசாக திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்த திருவிழாவின் ஒரு பகுதியாக இன்று திருத்தேரோட்டம் நடைபெற்றது. கோவில் அறங்காவலர் குழு தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்.



பின்னர்பக்தர்கள்வடம் பிடித்துஇழுக்க, தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த விழாவின்போது சுமார் 70க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# ஓடும் ரெயிலில் படியில் அமர்ந்து சென்ற பயணியிடம் செல்போன் பறிப்பு ஒருவர் கைது

சென்னை, ஜூன் 10

வேலூர் மாவட்டம் காட்பாடியை சேர்ந்த பிரகாஷ் ஜீவன் சிங் என்பவர் தன்பாத் விரைவு ரெயிலில் சென்னை நோக்கி பயணித்து கொண்டிருந்தார். அந்த ரெயில் வியாசர்பாடி பேசின் பிரிட்ஜ் நிலையங்களுக்கு இடையே சென்ற போது பிரகாஷ் படியில் அமர்ந்து பயணம் செய்துள்ளார்.

அப்போது அவர் தனது கையில் செல்போனை வைத்துக் கொண்டிருந்தார். இந்நிலையில், பிரகாஷிடம் இருந்த செல்போனை மர்ம நபர் ஒருவர் தட்டி பறித்து சென்றுள்ளார். இது குறித்து பிரகாஷ் அளித்த புகாரின் அடிப்படையில், பெரம்பூர் ரெயில்வே போலீசார் விசாரணை நடத்தி, வியாசர்பாடியை சேர்ந்த சிவா என்ற நபரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# தீர்த்தகிரி மலையில் 92 அடி உயர பிரம்மாண்ட முருகன் சிலைக்கு கும்பாபிஷேகம்



வேலூர், ஜூன் 10

வேலூர், பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் வெங்கடாபுரம் அடுத்த புதுவசூர் தீர்த்தகிரி மலையில் பல நூறு ஆண்டு பழமையான வடிவேல் சுப்பிரமணிய சாமி கோவில் இயற்கை எழிலுடன் அமைந்துள்ளது. இந்த கோவிலுக்கு முன்பாக 92 அடி உயரத்தில் மிகப்பிரமாண்டமான முருகன் சிலை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் உள்ள பத்துமலை முருகன் சிலையை வடிவமைத்த திருவாரூர் ஸ்தபதி இந்த சிலையையும் வடிவமைத்துள்ளார். தென் வடக்கு திசையை பார்த்தவாறு மிகவும் நேர்த்தியாகவடிவமைக்கப்பட்ட இந்த முருகன் சிலை மலை உச்சியில் கம்பீரமாக காட்சியளிக்கிறது.

திருப்பணிகள் நிறைவடைந்த நிலையில் கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி இன்று அதிகாலையில் யாகசாலை பூஜையுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது. பூஜை நிறைவடைந்த பின், பூஜிக்கப்பட்ட புனித நீர் கலசங்களை வாண வேடிக்கை, மேள தாளங்கள் முழங்க கோவில் நிர்வாகிகள்மற்றும்பக்தர்கள் ஊர்வலமாக எடுத்து சென்று, முதலில் வடிவேல் சுப்பிரமணிய சுவாமி கோவில் கோபுரத்தின் மீதுள்ள கலசத்தில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்தனர். பின்னர் மூலவர்கள் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து கோவில் எதிரே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 92 அடி உயரம் கொண்ட பிரம்மாண்ட முருகன் சிலைக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. டிரோன்கள் மூலம் நான்கு திசைகளிலும் இருந்து புனித நீர் ஊற்றி பூக்கள் தூவப்பட்டன. கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'முருகனுக்கு அரோகரா' என்ற பக்தி முழக்கத்துடன் முருகப்பெருமானை தரிசனம் செய்தனர். அவர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

# வைகாசி கடைசி சுப முகூர்த்த தினமான தூத்துக்குடி சிவன் கோவிலில் 31 திருமணங்கள்



தூத்துக்குடி ஜூன் 10

வைகாசி மாத வளர்பிறைகடைசிசுபமுகூர்த்த தினமான இன்று தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில்அமைந்துள்ள அன்னை ஸ்ரீ பாகம்பிரியாள் உடனுறை ஸ்ரீ சங்கரராமேஸ்வரர் கோவிலில் சுப்பிரமணியர் சன்னதி முன்பு இன்று காலை 31 திருமணங்கள் நடைபெற்றன. இதனால் கோவில் வளாகம் முழுவதும் புதுமண தம்பதிகள் மற்றும் திருமண வீட்டார் மற்றும் உறவினர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இதையொட்டி சிவன் கோவில் தேரடி அருகே தடுப்பு கம்பிகள் வைத்து போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். இதனால் தேரடியில் இருந்து புதுமணத்தம்பதிகள் கோவிலுக்குள் நடந்தே சென்றனர். ரத வீதி முழுவதும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் அணிவகுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனால் அந்த பகுதி முழுவதும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

# மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பு பணி: பொதுமக்கள் முழுஒத்துழைப்பு அளிக்க வேண்டும் கலெக்டர் இளம்பகவத்

தூத்துக்குடி, ஜூன் 10

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று சேரும் வகையில் உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் நமது மாவட்டத்தில் இல்லந்தோறும் சென்று அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளையும் கண்டறிந்து அவர்களது முழு விவரங்கள் அடங்கிய சமூக தரவுத்தளத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும்நகர்ப்புறம்மற்றும் ஊரகப் பகுதிகளில் முன்களப்பணியாளர்கள் மூலம்வீடு வீடாகசென்று கணக்கெடுப்பு நடத்தி மாற்றுத்திறனாளிகள் குறித்த விவரங்களைசேகரிக்கும் பணி நடைபெறவுள்ளது. கணக்கெடுப்பிற்காக ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட சமூக சேவை வழங்கும் நிறுவனங்கள் (CSPs) மூலம் முன் களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த கணக்கெடுப்புப் பணி ஜூன் 2ம்தேதி துவங்கி வருகிற ஆகஸ்டு மாத இறுதிக்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடத்தப்படும் இக்கணக்கெடுப்பிற்காக தங்கள் வீடுகளுக்கு வரும் முன்களப்பணியர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் முழுஒத்துழைப்பு அளித்து கணக்கெடுப்புப் பணி சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கர்ப்பரட்சாம்பிகை கோவில் வைகாசி விசாக தேரோட்டம்

தஞ்சாவூர் ஜூன் 10

தஞ்சாவூர் மாவட்டம் , பாபநாசம் அருகே உள்ள திருக்கருகாவூர் கர்ப்பரட்சாம்பிகை சமேத முல்லைவனநாதர் திருக்கோவிலில்வைகாசி விசாக பெருவிழா கடந்த 31ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 12 நாட்கள் நடைபெறும் வைகாசி உற்சவ விழாவில் தினசரி சுவாமி, அம்பாள்காலை மற்றும் இரவு வேளைகளில் வாகனங்களில் எழுந்தருளி வீதியுலா நடைபெற்றது.

7வது நாள் நிகழ்ச்சியாக சுவாமி முல்லைவனநாதருக்கும் அம்பாள் கர்ப்பரட்சாம்பிகை அம்பாளுக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது.



விழாவின் 9வது நாள் நிகழ்ச்சியாக இன்று திருத்தேரோட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேர் இழுத்து வழிபட்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருக்கோயில் செயல்அலுவலர் இரா. விக்னேஷ் மேற்பார்வையில், கோயில் பணியாளர்கள், கிராமவாசிகள் செய்திருந்தனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
10.6.2025

# ராமநாதபுரம்: கார் வேன் மோதி விபத்து சிறுமி உள்பட 2 பேர் பலி




ராமநாதபுரம், ஜூன் 10

ராமநாதபுரத்தில் சுற்றுலா வேன் ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த வேனில் 10க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர். அதே சாலையில் ஐடி ஊழியர் வெங்கடேஷ் என்பவர் காரில் வந்து கொண்டிருந்தார்.

இந்த நிலையில் எதிர்பாராதவிதமாக கார் மற்றும் சுற்றுலா வேன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வேனில் இருந்த 13 வயது சிறுமி மகாலட்சுமி மற்றும் வெங்கடேஷ் ஆகிய இருவரும் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் வேனில் பயணித்த 10 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனையடுத்து விபத்தில் படுகாயமடைந்த 10க்கும் மேற்பட்டோர் ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அடுத்தமாதம் திருமணம் நடைபெற இருந்த நிலையில், ஐடி ஊழியர் வெங்கடேஷ் விபத்தில் உயிரிழந்ததால் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திண்டுக்கல்லில் பெண் தீக்குளிக்க முயற்சி



திண்டுக்கல்: கொடைக்கானல் பள்ளங்கி, கோம்பை பகுதியில் உள்ள ஆறுமுகம் என்பவரின் மனைவி வனராணி. இவருக்குச் சொந்தமான இடத்தை சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதனை அகற்ற பல ஆண்டுகளாக அவர் போராடி வந்த நிலையில், விரக்தியில் குழந்தைகளுடன் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். அவரை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால், அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

# இன்றைய ராசி பலன்கள் (10.6.2025)

மேஷம்: பொதுப்பலன்: புதிய பொறுப்புகள் கிடைக்கும். எதிர்பாராத செய்திகள் வரலாம். வேலை: அதிகாரிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும். நிதி: வருமானம் அதிகரிக்கும். குடும்பம்: மனைவியின் உடல்நிலையை கவனிக்கவும்.

ரிஷபம்: பொதுப்பலன்: உடல்நலத்தில் கவனம் தேவை. உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளை தவிர்க்கவும். வேலை: முன்னேற்றத்திற்கான பாதை அமைக்கப்படும். நிதி: நண்பரிடமிருந்து நிதி ஆதாயம் கிடைக்கும். குடும்பம்: மனநிலை மகிழ்ச்சியாக இருக்கும்.

மிதுனம்: பொதுப்பலன்: புதிய பொறுப்புகள் கிடைக்கும். மனம் அமைதியின்றி இருக்கும். வேலை: பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் ஏற்படும். நிதி: ஆடம்பர பொருட்களை வாங்குவதைத் தவிர்க்கவும். குடும்பம்: கல்விப் பணிகள் மகிழ்ச்சியான பலன்களைத் தரும்.

கடகம்: பொதுப்பலன்: நண்பர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும். வேலை: தொழிலில் லாபத்திற்கான வாய்ப்புகள் இருக்கும். நிதி: நண்பரிடமிருந்து நிதி ஆதாயம். குடும்பம்: குடும்பத்தின் ஆரோக்கியத்தை கவனிக்கவும்.

சிம்மம்: பொதுப்பலன்: உணர்ச்சித் தெளிவு கிடைக்கும். வேலை: மூத்த அதிகாரிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும். நிதி: பண வரவு அதிகரிக்கும். குடும்பம்: குடும்பத்துடன் நல்ல நேரம் செலவிடுவீர்கள்.

கன்னி: பொதுப்பலன்: முக்கிய வேலைகளில் வெற்றி பெறலாம். வேலை: தொழில் முறை பணிகளில் அர்ப்பணிப்பு பலனைத் தரும். நிதி: நிதி ரீதியாக நாள் சாதாரணமாக இருக்கும். குடும்பம்: தொழில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

துலாம்: பொதுப்பலன்: புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. வேலை: குழு பணிகளில் முன்னேற்றம் காணலாம். நிதி: மிதமான செலவுகள் ஏற்படும். குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.

விருச்சிகம்: பொதுப்பலன்: தன்னம்பிக்கை அதிகரிக்கும். வேலை: புதிய திட்டங்களில் ஈடுபடுவீர்கள். நிதி: பண வரவு நிலையாக இருக்கும். குடும்பம்: உறவுகளில் ஒற்றுமை காணப்படும்.

தனுசு: பொதுப்பலன்: பயணங்கள் ஏற்படலாம். வேலை: புதிய பொறுப்புகள் கிடைக்கும். நிதி: மிதமான வருமானம் கிடைக்கும். குடும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

மகரம்: பொதுப்பலன்: மதிப்பு மற்றும் மரியாதை அதிகரிக்கும். வேலை: தொழிலில் முன்னேற்றம் காணப்படும். நிதி: பண வரவு அதிகரிக்கும். குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.

கும்பம்: பொதுப்பலன்: முதலீடுகள் நன்மை தரும். வேலை: புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நிதி: முதலீடுகள் மூலம் லாபம் கிடைக்கும். குடும்பம்: குடும்பத்தில் அமைதி நிலவும்.

மீனம்: பொதுப்பலன்: உணர்ச்சி நிலை மேம்படும். வேலை: புதிய பொறுப்புகள் கிடைக்கும். நிதி: வருமானம் அதிகரிக்கும். குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.

# பாலமுருகன் கோவிலில் மூன்றாம் ஆண்டு தேரோட்டம்



ராணிப்பேட்டை மாவட்டம் ரத்தினகிரி அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் திருக்கோவிலில் 3ஆம் ஆண்டு வைகாசி விசாக பிரம்மோற்சவத்தை தேர் திருவிழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அரோகரா.. அரோகரா.. பக்தி முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்து சிறப்பு வழிபாடு

தமிழ் கடவுளான முருகன் அவசரித்த நாளாக வைகாசி விசாகம் என்று சொல்லக்கூடிய பிரமோற்சவத்தை முன்னிட்டு தமிழக முழுவதும் உள்ள அனைத்து முருகன் கோவில்களில் திருவிழாக்கள் நடைபெற்று வருகிறது அதன் ஒரு பகுதியாக ராணிப்பேட்டை மாவட்டம் ரத்தினகிரி மலையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத ஶ்ரீ பாலமுருகன் திருக்கோவில் அமைந்துள்ளது இக்கோவில் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது இந்துசமய அறநிலைத்துறைக்கு உட்பட்ட மிக பிரம்மாண்டமாகவும் புகழ்பெற்ற ஸ்தலமாக விளங்கி வரும் இந்த திருத்தளத்தில் 3ஆம் ஆண்டு வைகாசி விசாக பிரமோற்சவம் தேர் பெருவிழா வெகு விமர்சையாக கோவிலின் பரம்பரை அறங்காவலர் பாலமுருகனடிமை சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.. மேலும் கோவிலில் தற்போது 3ஆம் ஆண்டு நடைபெறும் வைகாசி விசாக பிரம்மோற்சவ தேர் பெருவிழா நடப்பதால் கோவில் நிர்வாகத்தின் சார்பில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முருகப்பெருமானுக்கு பல்வேறு வகையான புதிய வாகனங்கள் செய்யப்பட்டு அதில் முருகப்பெருமானை 50 அடி உயரமுள்ள ரத தேரில் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ பாலமுருகன் சுவாமிகளுக்கு பல்வேறு வகையான பூ மாலைகள் மட்டும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜைகளை செய்து தங்க ஆபரணங்களை அணிவித்து தேர் ரதத்தில் அமர்ந்தபடி தேரினை கோவில் பரம்பரை அறங்காவலர் பாலமுருகனடிமை சுவாமிகள் தேரை வடம் பிடித்து துவக்கி வைக்கப்பட்ட பின்னர் கூடியிருந்த ஏராளமான பக்தர்கள் முருகனை மனதில் நினைத்தவாறு அரோகரா... அரோகரா.. அரோகரா.. என விண்ணை அதிரும்படி மேளதாளங்கள் முழங்க தேரை கோவில் முழுவதும் பக்தி பரவசத்துடன் வடம் பிடித்து இழுத்து சென்றபடி முருக ப்பெருமானை வணங்கி சென்றனர்.. மேலும் நடைபெற்ற வைகாசி விசாக தேர்த்திருவிழாவில் ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர்,திருவண்ணாமலை, சென்னை, பெங்களூர், உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்து சுமார் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை மனமுருகி வழிபட்டு சென்றனர்..

# பழனியில் ஒரே நாளில் 100 கல்யாணங்கள்



திண்டுக்கல், ஜூன் 10

பழனி அடிவாரத்தில் உள்ள திருஆவினன்குடி கோயிலில் திருமணம், காதுகுத்து உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். இந்நிலையில், வைகாசி மாத கடைசி முகூர்த்தநாள் என்பதால் திருஆவினன்குடி கோயிலில் ஒரேநாளில் 100 திருமணங்கள் நடைபெற்றன. இதனால் அப்பகுதியில் கூடிய மக்கள் கூட்டத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கல்வேலம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்தனர் மகிழ்ந்தனர்.

# கடும் சவால்களுக்கிடையே 'திருக்குறள்' படத்தை எடுத்தோம் இயக்குனர் பாலகிருஷ்ணன்



பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கை வரலாற்றை 'காமராஜ்' என்ற பெயரில் திரைப்படமாகத் தயாரித்த ரமணா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம், தற்போது திருவள்ளுவரின் வாழ்க்கையை 'திருக்குறள்' என்ற திரைப்படமாக தயாரித்துள்ளது. ஏ.ஜே.பாலகிருஷ்ணன் இயக்கத்தில்உருவாகியுள்ளஇப்படத்தில்வள்ளுவராககலைச்சோழன், வாசுகியாக தனலட்சுமி நடிக்கிறார்கள். இளையராஜா இசையமைத்துள்ளார்.

பட விழாவில் இயக்குனர் பாலகிருஷ்ணன் பேசும்போது, ''ஒரு மோசமான திரைக்கதையை கொண்டு, நல்ல படம் எடுக்க முடியாது. ஒரு நல்ல திரைக்கதையே படத்துக்கு ஆணிவேர். அதில் சமரசம் செய்துகொள்ளவே கூடாது. 'காமராஜ்' படத்தை தொடர்ந்து, திருவள்ளுவர் வாழ்க்கையை படமாக எடுங்கள் என்று என்னிடம் பலரும் சொன்னார்கள். திருக்குறளில் உள்ள 1,330 பாடல்களை எப்படி படமாக எடுக்கமுடியும்? என்று யோசித்தபோது, எங்களுக்கு முன்னுதாரணமாக அமைந்தது கருணாநிதியின் 'குரலோவியம்'.

இந்த படத்துக்கான பணம், அதன் போக்கிலேயே எங்களிடம் வந்து சேர்ந்தது. வாழ்க்கையில் பல விஷயங்கள் அதன் போக்கில் தான் நிகழும். கடும் சவால்களுக்கிடையே படத்தை எடுத்து முடித்தோம். நான் லாபத்துக்கு படம் எடுக்கும் ஆள் இல்லை. என்னை பொறுத்தவரை ஒரு நல்ல விஷயம் மக்களிடம் சென்று சேரவேண்டும். அதுதான் என் இலக்கு'', என்றார்.

# 'பரமசிவன் பாத்திமா' திரைப்பட விமர்சனம்

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஒரு மலைகிராமத்தில் சாதி சண்டை மேலோங்க, கிராமமே மூன்றாக பிரிந்து கிடக்கிறது. இதற்கிடையே காதலர்களாக வலம் வரும் விமல் சாயாதேவி ஜோடி, அந்த கிராமத்தில் சில இளைஞர்களை கொலை செய்கிறார்கள்.


இதையடுத்து விசாரணையில் களமிறங்கும் போலீஸ் அதிகாரி இசக்கி கார்வண்ணன், குற்றவாளிகளை நெருங்க முடியாமல் திணறுகிறார். ஒருகட்டத்தில் குற்றவாளிகளை நெருங்கும்போது திடுக்கிடும் உண்மைகள் வெளிச்சத்துக்கு வருகிறது. விமல் சாயாதேவி ஜோடி ஏன் கொலைகளை செய்கிறார்கள்? கொலைகளுக்கான பின்னணி என்ன? என்பதே பரபரப்பான மீதி கதை.

அழுத்தம் நிறைந்த கதாபாத்திரத்தில் நேர்த்தியான நடிப்பை கொடுத்து கவனம் ஈர்த்துள்ளார், விமல். அவரது ஆக்ரோஷமான இன்னொரு முகம் ஆச்சரியம். விமலுக்கு இணையாக சரிசமமான நடிப்பை கொடுத்து மிரட்டியிருக்கிறார், சாயாதேவி. பாதிரியாக வரும் எம்.எஸ்.பாஸ்கரின் எரிச்சலூட்டும் நடிப்பு, அவரது திரை அனுபவத்துக்கான முத்திரை.

காவல்துறைஅதிகாரியாகஇசக்கிகார்வண்ணன், வில்லனாகசுகுமார், அருள்தாஸ், ஸ்ரீரஞ்சனி, மனோஜ்குமார், ஆதிரா, சேஷ்விதா, விமல்ராஜ், மகேந்திரன், ஆறு பாலா, வீரசமர், களவாணி கலை என அனைவரது நடிப்பிலும் எதார்த்தம் தெரிகிறது. பனி சூழ்ந்த பகுதிகளிலும் சுகுமாரின் ஒளிப்பதிவில் மெனக்கெடல் தெரிகிறது. தீபன் சக்ரவர்த்தியின் இசை ஆறுதல்.

எதார்த்த காட்சிகள் நிறைந்த படத்தில், மத பிரசாரத்தை முன்னிறுத்தும் காட்சிகளை தவிர்த்து இருக்கலாம். திரைக்கதையில் குழப்பம் கூடாது. பிரச்சினைக்குரிய கதைக்களத்தில் படத்தை இயக்கி, மதரீதியான பாகுபாடுகள் இன்னும் இருக்கத்தான் செய்கிறது என்ற கருத்தை சமரசமின்றி சொல்லி தீர்த்துள்ளார், இயக்குனர் இசக்கி கார்வண்ணன். பரமசிவன் பாத்திமா சர்ச்சை நிச்சயம்

# ''கதாநாயகி இல்லாமல் எந்த படமும் இல்லை'' நடிகை வாமிகா கபி



'மாலை நேரத்து மயக்கம்' என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் பிரபலமானவர் வாமிகா கபி. தொடர்ந்து தெலுங்கு, மலையாளம், இந்தி, பஞ்சாபி மொழி படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், வாமிகா கபி ஹீரோயின்களுக்கிடையேயான சம்பள பாகுபாடு பற்றி கருத்து தெரிவித்திருக்கிறார். இது பற்றி அவர் கூறுகையில், ''ஒருவருக்கு அதிக சம்பளம், ஒருவருக்கு குறைவான சம்பளம் என்பது எனக்கு கவலை அளிக்காது. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் அவரது திறமைக்கேற்றவாறு சம்பளம் உண்டு. ஆனால் ஹீரோயின்கள் பெண்கள் என்பதால் குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது. கேட்டால் ஹீரோக்கள் பார்வையாளர்களை அதிகமாக ஈர்க்கிறார்கள் என்று கூறுகின்றனர். கதாநாயகி இல்லாமல் எந்த படமும் இல்லை' என்றார்.

# டி20 கிரிக்கெட் வெஸ்ட் இண்டீஸை வீழ்த்தி தொடரை கைப்பற்றிய இங்கிலாந்து



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 30 என இங்கிலாந்து கைப்பற்றியது.

தற்போது இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலையில் உள்ள நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டி20 போட்டி இன்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்திற்கான டாசை வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதனையடுத்து, களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 196 ரன்கள் குவித்தது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக ஷாய் ஹோப் 49 ரன் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக லூக் வுட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து 197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து அணி, நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இறுதியில் 18.3 ஓவர்களில் இலக்கை எட்டி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக பட்லர் 47 ரன் எடுத்தார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 2வது ஆட்டத்திலும் வெற்றி பெற்று தொடரை இங்கிலாந்து கைப்பற்றி உள்ளது. 3 வது டி 20 போட்டி 10ம் தேதி நடைபெற உள்ளது.

# டிஎன்பிஎல்: திண்டுக்கல் அணியை வீழ்த்தி திருப்பூர் வெற்றி



9வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர், கோவையில் உள்ள எஸ்.என்.ஆர். கல்லூரி மைதானத்தில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெறும்.

இந்த தொடரில் இன்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் திண்டுக்கல் டிராகன்ஸ் திருப்பூர் தமிழன்ஸ் அணிகள் மோதின.இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற திருப்பூர் அணியின் கேப்டன் சாய் கிஷோர் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி திண்டுக்கல் அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்கம் முதல் திருப்பூர் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திண்டுக்கல் அணி அடுத்து விக்கெட்டுகளை இழந்தது. இதனால் திருப்பூர் அணி 16.2 ஓவர்கள் முடிவில் விக்கெட் 93 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது.அந்த அணியில் அதிகபட்சமாக சிவம் சிங் 30 ரன்கள் எடுத்தார் . திருப்பூர் அணியில் சிறப்பாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். தொடர்ந்து 94 ரன்கள் இலக்குடன் திருப்பூர் அணி விளையாடியது.

தொடக்கம் முதல் அந்த அணி அதிரடியாக விளையாடி ரன்கள் குவித்தது. குறிப்பாக திருப்பூர் அணியில் துஷார் ரேஜா சிறப்பாக விளையாடினார். பந்துகளை பவுண்டரி , சிக்சருக்கு பறக்க விட்ட அவர் அரைசதமடித்து அசத்தினார். இறுதியில் 11.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு திருப்பூர் 94 ரன்கள் எடுத்தது. இதனால் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் திருப்பூர் வெற்றி பெற்றது

# இந்திய ஏ அணிக்கு எதிரான டெஸ்ட்: முதல் இன்னிங்சில் இங்கிலாந்து லயன்ஸ் 327 ரன்களில் ஆல் அவுட்



இந்தியா ஏ இங்கிலாந்து லயன்ஸ் அணிகள் இடையிலான 2வது மற்றும் கடைசி அதிகாரபூர்வமற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டி (4 நாள் ஆட்டம்) நார்த்தம்டானில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 89.3 ஓவர்களில் 348 ரன்களில் ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக கே.எல்.ராகுல் 116 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து லயன்ஸ் அணி நேற்றைய 2ம் நாளில் 46 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 192 ரன்கள் அடித்திருந்தபோது போதிய வெளிச்சம் இன்மை காரணமாக ஆட்டம் அத்துடன் முடித்து கொள்ளப்பட்டது. ஜோர்டான் காக்ஸ் 31 ரன்களுடனும், ஜேம்ஸ் ரெவ் ரன் எதுவுமின்றியும் களத்தில் உள்ளனர்.

இந்திய அணி தரப்பில் அன்ஷூல் கம்போஜ், துஷர் தேஷ்பாண்டே, தனுஷ் கோட்டியான் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர். இந்நிலையில், இன்று 3ம் நாள் ஆட்டம் நடைபெற்று வருகிறது. இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த இங்கிலாந்து லயன்ஸ் அணி தனது முதல் இன்னிங்சில் 327 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இங்கிலாந்து லயன்ஸ் தரப்பில் அதிகபட்சமாக எமிலோ ஹே 71 ரன் எடுத்தார். இந்தியா ஏ தரப்பில் கலீல் அகமது 4 விக்கெட் வீழ்த்தினார். இதையடுத்து 21 ரன் முன்னிலையுடன் இந்திய அணி தனது 2வது இன்னிங்சை ஆடி வருகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.